(8) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) 5-வது திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 40/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 58/1961)73(7) பிரிவின் படி, பழத்தோட்டங்களாக அல்லது தோப்புகளாக அல்லது பாக்குத் தோட்டங்களாக 1959 ஜூலை 1-ம் நாளன்று அல்லது அதற்கு முன்பு மாற்றப் பட்ட நிலங்கள் தொடர்ந்து அவ்வாறு இருக்கும் வரையில், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. வாழை மரம் மேற்சொன்ன சட்டத்தில் 3(47) பிரிவில் 'தோப்பு' என்னும் சொற்றொடரின் பொருள் விளக்கத்தின்கீழ் வருகிற பழமரம் என்பதால், 1959 ஜூலை 1-ம் நாளன்று வாழை மரங்கள் வளரும் நிலங்கள் உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விதி விலக்கு பெறுதற்குரியவை ஆகலாம் என்று தமிழ்நாடு அரசுக்கும் தாடிக்கார வன்னியருக்கும் நடைபெற்ற (சிவில் மனு விசாரணை மனு எண். 859/67) வழக்கில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே, வாழை மரங்கள் வளரும் நிலங்களை உச்சவரம்புச் சட்டத்திற்குள் கொண்டுவரும் வகையில், பழத்தோட்டங்களும் தோப்புகளும் என்னும் சொற்றொடர்களின் பொருள் விளக்கத்திலிருந்து வாழையை நீக்கிவிடுவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசால் ஏற்பளிக்கப்பட்ட தமிழ்நாடு 1932-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் அல்லது திருவாங்கூர்-கொச்சி 1951-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிற சங்கங்கள் நீங்கலாக ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாகவுள்ள ஒரு நிலத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 73(3) பிரிவின்படி உச்சவரம்புச் சட்டத்தின் விதித்துறைகளினின்றும் விலக் களிக்கப்படுகிறது. இவ்விலக்கு, ஒரு நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத் திற்கு அரசால் ஒப்படை செய்யப்பட்ட அந்த நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் வைத்துள்ள ஒரு நிலத்திற்கு மட்டுமே பொருந்தும் வகையில், மேற் சொன்ன விதித்துறை திருத்தப்படவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

@ 414-415ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ் 25]   [திரு. ப. உ சண்முகம்]

தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு 58-ஆம் சட்டத்தின் 73 (6) பிரிவின்படி, இச்சட்டத்தின் தொடக்க நாளன்று இருந்த எல்லா மலைத்தோட்டங்களும், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. இதைப்போலவே, 73(8) பிரிவின்படி, இச்சட்டத்தின் தொடக்க நாளன்று விறகு மரங்கள் மட்டுமே வளர்க்கப்பட்டுள்ள நிலத்திற்கு உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப் படுகிறது. மூலச் சட்டத்தையொட்டி, இச்சட்டத்தின் தொடக்க நாள் 1960 ஏப்ரல் 6 ஆக இருந்தது. அதன் விளைவாக, மலைப் பகுதி நீங்கலான ஒரு பகுதியில் 1960 ஏப்ரல் 6 ஆம் நாளில் இருந்த மலைத் தோட்டங்களும், விறகு மரங்களும் உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டவையாகும். மேலும், மேற்சொன்ன சட்டத்தின் 31 ஆவது பிரிவின்படி, 1960 ஏப்ரல் 6 ஆம் நாளில் இருந்த மலைத் தோட்டப் பரப்பளவில் 20 சதவீதம் வரை, அந்த மலைத் தோட்டத்தில் பரவியுள்ள அல்லது அதற்குப்பக்கத்தில் இருக்கும் எந்த ஒரு நிலத்தையும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படலாம். தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1970) மூலம், மூலச்சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (11) பகுதியில் காணும் இச்சட்டத்தின் தொடக்க நாளுக்கான பொருள் விளக்கம் 1970 பிப்ரவரி 15 ஆம் நாள் என்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் விளைவாக 73(6) பிரிவில் குறிப்பிட்டுள்ள மலைத்தோட்டங்கள், 73(8) பிரிவில் குறிப்பிட்டுள்ள விறகு மரங்கள் குறித்த விதிவிலக்கு 1970 பிப்ரவரி 15 ஆம் நாளன்றிருந்த மலைத் தோட்டங்கள், விறகு மரங்களுக்கு மட்டுமே பொருந்துவதாகப் பொருள் கொள்ளவேண்டும். மலைப்பகுதிகளில் உள்ள நிலங்கள் பற்றிய விதிவிலக்கு 1—3—1972லிருந்து நீக்கப்பட்டபோதிலும், மலைப்பகுதிகளில் உள்ள மலைத்தோட்டங்களைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு, 73(6) பிரிவையொட்டி, தொடர்ந்து இருக்கும். எல்லாப் பகுதிகளிலுமுள்ள மலைத்தோட்டங்கள் விறகு மரக்காடுகள் குறித்த விதிவிலக்கு, 1960 ஏப்ரல் 6 ஆம் நாளிலிருந்து மலைத்தோட்டங்களுக்கும் விறகு மரங்களுக்கும் மட்டுமே பொருந்தவேண்டும் என்றும், மலைத் தோட்டம் ஒன்று கூடுதலாக நிலம் வைத்துக்கொள்ள மேற்படிச் சட்டத்தின் 31-வது பிரிவின்கீழ் வழங்கப்படுகிற அனுமதி 1960 ஏப்ரல் 6 ஆம் நாளிலிருந்து மலைத்தோட்டப் பரப்பளவில் 20 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட வேண்டும் என்றும், இவ்வரசு இப்போது முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றுவதே இந்தச் சட்ட வரைவின் நோக்கமாகும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) 5-வது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) 5-வது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) 5-வது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இத்துடன் மன்றம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

7. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

234. Notification issued with G.O. Ms. No. 1608, Revenue, dated the 30th May 1972 in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 3987 (*b*) of 1971, dated the 7th